தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 225/2022 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திரு.துரைமுருகன் | | | |
| **Date** | **:** | **09.04.2026** | | | |
| **Time** | **:** | **12.25 p.m to 1.14 p.m** | | | |

தொ.த.சா.**1.**திரு.துரைமுருகன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

ஆண்டு ஊதிய உயர்வு தள்ளிபோகும் காரணத்தினால் அது சம்மந்தப்பட்ட உத்தரவை ரத்து செய்ய கேட்ட வழக்கு போட்டுள்ளேன். 10.06.2015 அன்று எந்த தடத்தில் பேருந்தை இயக்கினேன் என்றால் தாம்பரத்திலிருந்து பூந்தமல்லி போகும் பேருந்தை இயக்கினேன். குரோம்பேட்டை பேருந்து நிறுத்ததில் ஒரு பயணி ஏற முயற்சி செய்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பேருந்து முன் கதவு வழியாக பயணி ஏற முயற்சி செய்தார் என்றால் இல்லை. ஒரு பயணிக்கு பேருந்தின் பேருந்தின் முன் பக்க டயர் இடித்து விபத்து ஏற்பட்டது தெரியும். சத்தம் கேட்டு இறங்கி வந்து பார்த்தபோது தெரிந்தது. அந்த விபத்து என்னுடைய கவன குறைவு மற்றும் அஜாக்கிரதையால் நடந்தது என்றால் தவறு. விபத்த சம்மந்தமாக மெமோ கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். நடுவர் நீதிமன்றத்தில் எனக்கு எதிராக வழக்கு நடந்தது என்றால் இல்லை. சம்பவம் சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை. விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு நிர்வாகம் பெரும் தொகையை நஷ்டஈடாக கொடுத்தது என்றால் தெரியாது. 02.11.2015 தேதியிட்ட குறிப்பாணை

எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு விளக்கம் கொடுத்தேன் என்றால் ஆமாம். 20.07.2019 அன்று நான் பணியில் இருந்தபோது உயிர் இழப்பு விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. என்னுடைய கவன குறைவினால் விபத்து ஏற்பட்டு நிர்வாகம் பெரும் தொகையை நஷ்ட ஈடாககொடுத்த காரணத்தினால் தான் எனக்கு எதிராக ஒரு வருடம் ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய பணி காலம் திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் தான் எனக்கு தண்டனை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. உள்துறை விசாரணை முறையாக தான் நடைபெற்றது என்றால் தவறு. என்னுடைய மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு வழங்கப்பட்ட தண்டனை நியாமானது என்றால் குறைந்த தண்டனை தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் என் தரப்பு நியாயத்தை சொல்ல வாய்ப்பு வழங்கப்படவில்லை. உள்துறை விசாரணையும் நடைபெறவில்லை.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.04.09 19:15:50 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:09.04.2026.